**செ. கு. எண்**: 308 **நாள்**: 28.08.2012

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 28.8.2012**

சென்னை, திருவல்லிக்கேணி, அரசு கஸ்தூரிபா காந்தி தாய்சேய் நல மருத்துவமனையில் இறந்த குழந்தையின் முகத்தில் காயம் ஏற்பட்டது தொடர்பாக எனக்கு தகவல் வரப்பெற்றதும், இது குறித்து தீவிர விசாரணை நடத்தி, இதற்கு காரணமானவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் உத்தரவிட்டு இருந்தேன்.

எனது உத்தரவினையடுத்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மற்றும் அரசுச் செயலாளர் மருத்துவமனைக்கு சென்று நடந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தியுள்ளனர். மேலும், இந்த நிகழ்வு குறித்து மருத்துவ அலுவலர்களைக் கொண்ட விசாரணைக் குழு உடனடியாக அமைக்கப்பட்டது. அந்தக் குழு இது குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு, விசாரணை அறிக்கையை அளித்துள்ளது.

அந்த விசாரணை அறிக்கையில், திரு. ரஞ்ஜித் குமார் என்பவரின் மனைவி திருமதி மலர் என்பவருக்கு 15.8.2012 அன்று பெண் குழந்தை பிறந்ததாகவும், குழந்தை குறை மாதத்தில் பிறந்ததால் இங்குபேட்டரில் வைக்கப்பட்டதாகவும், சில நாட்கள் கழித்து குழந்தைக்கு காய்ச்சல் மற்றும் மூச்சுத் திணறல் ஏற்பட்டதன் காரணமாக செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டதாகவும், தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் குழந்தை **26.8.2012** அன்று மாலை **5.45** மணிக்கு இறந்துவிட்டதாகவும், இது குறித்து குழந்தையின் தந்தை திரு. ரஞ்ஜித் குமாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அவரும் இறந்த குழந்தையை பார்த்ததாகவும், அப்போது குழந்தையின் முகத்தில் எவ்விதக் காயமும் இல்லை என்றும், சம்பந்தப்பட்ட ஆவணத்தில் அவர் கையெழுத்திட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர், இறந்த குழந்தையின் உடலை நன்கு கட்டி ஓர் அறையில் இருந்த தொட்டிலில் பணியில் இருந்த செவிலியர் வைத்ததாகவும், மறு நாள் காலையில் குழந்தையின் தந்தை அந்தக் குழந்தையை வாங்க வந்த போது, அவர் குழந்தையின் முகத்தில் இருந்த காயத்தை கவனித்து அதை பணியிலிருந்த செவிலியரிடமும், உதவிப் பேராசிரியடமும் தெரிவித்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் இறப்பு ஏற்பட்டால் பிரேதப் பரிசோதனை தேவையில்லாத இனங்களில் இறந்தவர் உடல் உடனடியாக உரியவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது தான் அரசு விதிமுறைகள் ஆகும். மேற்காணும் சம்பவத்தில், அவ்வாறான விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை. சவக்கிடங்கிற்குள்ளும் இறந்த குழந்தையின் உடல் பாதுகாப்பாக வைக்கப்படவில்லை. இந்த நிகழ்வில் கவனக்குறைவாகப் பணியாற்றிய இரு மருத்துவர்கள் உட்பட **9** மருத்துவப் பணியாளர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் குழந்தை இறந்த பிறகே முகத்தில் காயம் ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வந்துள்ளது. அதற்கான காரணம் உடலில் செப்டிசீமியாவால் ஏற்பட்டுள்ள திசுக்களின் மாற்றம் போன்றவற்றின் காரணமாகவே இருக்கக் கூடும். எனினும், எலி கடித்ததால் இந்தக் காயம் ஏற்பட்டதா என்பதை அறியும் பொருட்டு, பிரேதப் பரிசோதனை மற்றும் தடயவியல் திசு பரிசோதனைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாட்டில் இது போன்ற நிகழ்வுகள் நடைபெறா வண்ணம் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து இன்று **(28.8.2012)** எனது தலைமையில் தலைமைச் செயலகத்தில் ஓர் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. மருத்துவமனை விதிமுறைகளின்படி, பிரேதப் பரிசோதனை தேவைப்படாத இனங்களில் இறந்தவர் உடலை உடனடியாக உரியவரிடம் ஒப்படைப்பதை மருத்துவ நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு, உடனடியாக இறந்தவர் உடலை வழங்க இயலாத நிலையில், சவக்கிடங்கில் மட்டுமே உரிய பாதுகாப்புடன் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. அரசு மருத்துவமனை வளாகங்களில் நாய், பூனை, எலி முதலியவை வராமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை முனைப்புடன் எடுக்கவும், அதற்குத் தேவையான கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

3. எலிகளை பிடிப்பதில் பழக்கமுள்ள இருளர்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

4. சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும், மருத்துவ நிர்வாகத்துடன் இணைந்து இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்யும்.

5. மருத்துவமனைகளில் நோயாளிகளை பார்க்க வரும் பார்வையாளர்கள் மருத்துவமனைகளிலேயே உணவு அருந்துவதால், நாய், பூனை, எலி தொல்லைகள் ஏற்படுகின்றன. எனவே, மருத்துவமனை வளாகத்தில் உணவு அருந்துவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6. மருத்துவமனைகளுக்குள் இயங்கும் நடமாடும் உணவகங்கள் உடனடியாக மூடப்படும். பொதுமக்கள் உணவகங்களிலேயே உணவு அருந்த வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படும்.

7. பார்வையாளர் நேரங்களில் மட்டுமே பார்வையாளர்களை அனுமதிக்க மருத்துவ நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும்.

மருத்துவமனைகளில் தூய்மையைக் கடைபிடிக்கும் பொருட்டு மேற்காணும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**